தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை–6.
ந.க.எண். 91500/சி1–இ1/12 நாள் 19.12.2012.

-------

பொருள்: தமிழ்நாடு பள்ளிக் கல்விப் பணி – முன்னுரிமைப் பட்டியல் 01.01.2013 நிலவரப்படி அரசு உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் பதவிக்குப் பதவி உயர்வு மூலம் நியமனம் செய்யத் தகுதி வாய்ந்தோர் பட்டியல் தயார் செய்தல் – விவரங்கள் கோருதல் – சார்ந்து.

*******

2013-14-ம் கல்வியாண்டுக்கு அரசு உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் பதவி உயர்வுக்கான தகுதி வாய்ந்தோர் பட்டியல் தயார் செய்ய சென்ற ஆண்டு நடைமுறையிலேயே இவ்வாண்டும் 01.01.2013–ன் நிலவரப்படி தமிழ்நாடு பள்ளிக் கல்விப் பணியின் கீழ் அமைந்துள்ள அரசு உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் காலிப் பணியிடங்களை, பதவி உயர்வின் மூலம் நியமனம் செய்யும் பொருட்டு அரசு உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் பதவிக்குத் தகுதி வாய்ந்த பட்டதாரி ஆசிரியர், அதனையொத்த பணிநிலையில் உள்ள ஆசிரியர்கள் மற்றும், பதவி உயர்வு மூலம் பணிமாறுதல் பெற்ற முதுகலை ஆசிரியர்களாகப் பணிபுரிபவர்களுள் கீழ்கண்ட ஆசிரியர்கள் சார்பான விவரங்களைக் இணைப்பில் உள்ள படிவத்தில் தொகுத்து பணிந்தனுப்புமாறு அனைத்து முதன்மைக்கல்வி அலுவலர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

1 அரசு உயர்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியராகப் பதவி உயர்வு / பணி மாறுதல் வழங்கப்பட்டு அதனை தற்காலிகமாக மூன்று ஆண்டுகளுக்குத் உரிமைவிடல் செய்தவர்களுள், தற்காலிகப் உரிமைவிடல் செய்த நாளிலிருந்து 31.12.2012 அன்று மூன்று ஆண்டுகாலம் முடித்தவர்கள்.

2 1985–86 ஆம் ஆண்டு வரை அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தெரிவு செய்யப்பட்டவர்களில் பெயர் விடுபட்டவர்கள்.

3 அரசுப் பள்ளிகளில் 31.12.2001 வரையில் நியமனம் பெற்று பணிபுரிந்துவரும் முதல்நிலை மொழி ஆசிரியர் மற்றும் உடற்கல்வி இயக்குநர் நிலை II ஆக நியமனம் பெற்றவர்களுள் பி.ட்டி/பி.எட் பட்டம் 31.12.2001–க்குள் பெற்றவர்கள் மட்டும்.

4 தேர்வாணையம் மூலம் தெரிவு செய்யப்படாமல், வேலைவாய்ப்பகம் மூலம் முற்றிலும் தற்காலிக அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டு, அரசாணை எண்.1325 நாள் 03.08.88–ன் படியும், மற்றும் அரசாணை எண்.125,367,390 போன்றவற்றின் மூலம் முன்தேதியிட்டு பணிவரன் முறைபடுத்தப்பட்ட பட்டதாரி ஆசிரியர்கள்/மொழியாசிரியர்கள் ஆகியோர்களுள் விடுபட்டு போன மேற்படி ஆசிரியர்கள் மற்றும் உடற்கல்வி இயக்குநர் நிலை II –லிருந்து உடற்கல்வி இயக்குநர் நிலை–I பதவி உயர்வு பெற்றவர்களுள் 31.12.2001 க்குள் பி.எட். பட்டம் தேர்ச்சி பெற்றவர்கள்.

5 ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் பட்டதாரி ஆசிரியர்களாக 2000–2001ஆம் ஆண்டு வரை தெரிவு செய்யப்பட்டு 1.1.2012–ன் நிலவரப்படியான முன்னுரிமை பட்டியலில் இடம் பெற்றவர்களின் பதவி உயர்வுக்கு விடுபட்டுப்போன அனைத்து ஆசிரியர்கள், மீளவும் அவர்கள் சார்பாகவும் விண்ணப்பப் படிவங்களைப் பரிந்துரை செய்திடுமாறும் தெரிவிக்கலாகிறது.

6 பதவி உயர்வு மூலம் பள்ளி உதவி ஆசிரியர் தரத்தில் 31.12.2001 வரையில் நியமனம் பெற்று பணியாற்றிவரும் ஆசிரியர்கள்.

7 ஊராட்சி ஒன்றிய பள்ளிகள் மற்றும் இதர பள்ளிகளில் இருந்து பள்ளி உதவி ஆசிரியர் / முதல்நிலை மொழி ஆசிரியர் தரத்தில் 31.12.2001 வரையில் ஈர்த்துக் கொள்ளப்பட்டவர்கள்.

8 01.01.2012 வரை அரசு உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் பதவிக்குப் பதவி உயர்வு மூலம் நியமனம் செய்யத் தயார் செய்யப்பட்ட முன்னுரிமை பட்டியலில் பெயர் சேர்க்கக் கோரி (தொழிற்கல்வி ஆசிரியர்கள் நீங்கலாக) நீதிமன்ற வழக்கு தொடுத்தவர்களுள் 01.01.2013 அன்று தகுதி பெற்றவர்கள்.

மேற்காணும் வகை ஆசிரியர்கள் சார்பாக விவரங்கள் அனுப்புகையில் கீழ்காணும் விவரங்கள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

1) அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் தெரிவு செய்யப்பட்டவர்கள் சார்பாக விவரங்கள் அளிக்கையில் தேர்வாணையம் மூலம் தெரிவு செய்யப்பட்ட ஆண்டு மற்றும் தர எண் தவறாமல் குறிப்பிடப்பட வேண்டும். தர எண் மற்றும் ஆண்டிற்கான ஆதாரங்கள் இணைக்கப்பட வேண்டும்.

2) பி.டி / பி.எட். பட்டம் பெற்றிராத முதனிலைத் தமிழாசிரியர் மற்றும் பள்ளி உதவி ஆசிரியர் நிலையில் உள்ள பிறவகை ஆசிரியர்களின் பெயர்களை எக்காரணத்தை முன்னிட்டும் பட்டியலில் சேர்க்கக் பரிந்துரை செய்யக்கூடாது.

3) உடற்கல்வி இயக்குநர்கள் நிலை – II சார்பாக 31.12.2001–க்குள் பி.ட்டி / பி.எட். பட்டம் பெற்றிருந்தால் மட்டுமே அவர்களது பெயர்களைப் பட்டியலில் சேர்க்க பரிந்துரை செய்ய வேண்டும்.

4) பள்ளி மற்றும் பட்டப்படிப்பில் தமிழ் மொழி அல்லாத பிற மொழிகளில் பயின்ற ஆசிரியர்கள், தமிழ் இரண்டாம் மொழித் தேர்வில் தேர்ச்சி பெற்றிருந்தால் மட்டுமே அவர்களது பெயர்களை பட்டியலில் சேர்க்க வேண்டும். இத்தகைய ஆசிரியர்கள் எஸ்.எஸ்.எல்.சி தமிழ் பாடத்தை தனித்தேர்வராக எழுதி தேர்ச்சி பெற்றிருந்தால் அவரது பெயரை பரிந்துரை செய்யக்கூடாது.

5) பணியாளர்களின் பிறந்த தேதி, நியமனத்தேதி, கடந்த 5 ஆண்டுகளில் தண்டனை ஏதும் பெற்றிருப்பின் அதன் விவர நகல் மற்றும் , ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் இருப்பின் அதன் விவரம் போன்றவற்றை சரியாக உறுதி செய்து அளித்தல் வேண்டும்.

6) ஏற்கனவே அரசு உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் பதவி உயர்வு வழங்கப்பட்டு, அப்பதவி உயர்வை நிரந்தரமாகத் துறப்பு செய்தவர்களின் பெயர்களை எக்காரணத்தைக் கொண்டும் பட்டியலில் சேர்க்கக் பரிந்துரை செய்யக் கூடாது.

7) நேரடியாக முதுகலை ஆசிரியர்களாக பணிநியமனம் பெற்றவர்கள் பெயர்களையும் எக்காரணத்தைக் கொண்டும் பட்டியலில் சேர்க்க பரிந்துரை செய்யக் கூடாது.

8) உயர்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர் பதவிக்கு பதவி உயர்வு மூலம் நியமனம் செய்ய பரிந்துரை செய்யப்படும் அனைத்து ஆசிரியர்களும் கீழ்க் குறிப்பிட்ட தேர்வுகளில் கண்டிப்பாகத் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். டிசம்பர் 2012–ல் துறை தேர்வு எழுதி தேர்ச்சி பெற்றவர்கள் பெயர்களை எக்காரணம் கொண்டும் பட்டியலில் சேர்க்க கூடாது.

   அ) நிர்வாக அலுவலருக்கான கணக்குத் தேர்வு (அல்லது) சார்நிலை அலுவலர்களுக்கான கணக்குத் தேர்வு பாகம்– I

   ஆ) மாவட்ட அலுவலக நடைமுறை நூல் தேர்வு (தற்போது தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல் தேர்வு)

9) ஊராட்சி ஒன்றிய பள்ளி மற்றும் இதர பள்ளிகளிலிருந்து ஈர்த்துக் கொள்ளப்பட்டவர்கள் சார்பில் பள்ளிக்கல்வித் துறையில் ஈர்த்துக் கொள்ளப்பட்ட நாள் ஆதாரத்துடன் குறிப்பிடப்பட வேண்டும்.

10) பட்டதாரி ஆசிரியர்களாக பதவி உயர்வு பெற்றவர்கள் பணிவரன்முறை நாள் மற்றும் தகுதிக்காண்பருவம் முடித்தலை உறுதி செய்யவேண்டும் பணிவரண்முறை நாள் தெளிவாக (முற்பகல் / பிற்பகல்) அவசியம் குறிப்பிடவேண்டும் இது சார்ந்து சம்பந்தப்பட்ட முதன்மைக்கல்வி அலுவலர் உறுதி செய்யப்படவேண்டும்

11) ஏற்கனவே பள்ளி உதவி ஆசிரியர் / முதல்நிலை மொழி ஆசிரியராகப் பணியாற்றி தற்போது முதுகலை ஆசிரியராகப் பணியாற்றுபவர்கள் சார்பில் பள்ளி உதவி ஆசிரியர் / முதல் நிலை மொழி ஆசிரியர் நிலையில் அவர்களது முதுநிலையைக் கணக்கில் கொள்ள வேண்டும்.

12) மேலே வரிசை எண்.1 முதல் 11 முடிய குறிப்பிட்டுள்ள அனைத்து வகை ஆசிரியர்கள் தற்போது பதவி உயர்வு மூலம் முதுகலை ஆசிரியர்களாகப் பணியாற்றி வந்தாலும் அவர்களது பெயர் பட்டியலில் சேர்க்க பரிந்துரை செய்ய வேண்டும்.

13) தொடக்கக்கல்வி துறையில் பணிபுரியும் 30 உதவி தொடக்கக்கல்வி அலுவலர்களின் முன்னுரிமைப்பட்டியல் விவரங்கள் இத்துடன் இணைப்பில் உள்ள படிவத்துடன் ஒப்புநோக்கி தொடக்கக்கல்வி இயக்குநரால் அனுப்பிவைக்குமாறு கனிவுடன் தெரிவிக்கப்படுகிறது.

முதன்மைக் கல்வி அலுவலர்களிடமிருந்து பெறப்படும் பரிந்துரை பட்டியலில் இடம் பெற்றுள்ள ஆசிரியர்கள் மட்டுமே அரசு உயர்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர் நியமனத்திற்கெனத் தயாரிக்கப்படும் முன்னுரிமைப் பட்டியலில் (Panel) இடம் பெறுவார்களாதலால் இப்பொருளில் தங்களது தனிப்பட்ட கவனத்தைச் செலுத்தி தகுதி வாய்ந்த அனைத்து ஆசிரியர்கள் சார்பாக **இணைப்பில் கண்டுள்ள மாதிரி படிவத்தின்படி** முன்னுரிமைப் பட்டியலை முழுமையாகப் <u>**புத்தக**</u>

**<u>வடிவில்</u>** தயார் செய்து (எ4 தாளில் மட்டும்) **<u>22 .01 .2013–க்குள்</u>** இதற்கான குறுந்தகட்டுடன் (With C.D.) தனிநபர் மூலம் அனுப்பி வைக்குமாறு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் தெரிவிக்கலாகிறது. பெயர் விடுபட்டதாகத் தெரிவித்து எந்த ஆசிரியரிடமிருந்தாவது பின்னர் முறையீடு ஏதும் பெறப்படின், அதற்கு சம்பந்தப்பட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களே முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும் என்றும், எவ்வித காலதாமதமும் செய்யாமல் குறிப்பிட்ட நாளுக்குள் முழுமையான தொகுப்பு அறிக்கை அனுப்பிடவும் தெரிவிக்கலாகிறது.

இச்செயல்முறைகளைப் பெற்றுக் கொண்டமைக்கு ஒப்புதல் மறு அஞ்சலில் பணிந்தனுப்புமாறும் தெரிவிக்கலாகிறது.

ஒம்/– கு.தேவராஜன்
பள்ளிக்கல்வி இயக்குநர்

பெறுநர்:
அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

நகல்: பள்ளிச்சாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்குநர், சென்னை–6.
நகல்: மாநிலத் திட்ட இயக்குநர், மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டம், சென்னை–6.
நகல்: தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை–6.
நகல்: ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநர், சென்னை–6.

## இணைப்பு–1

01.01.2013–ல் உள்ளவாறு அரசு உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியராக நியமனம் பெறத் தகுதி பெற்றவர்கள் விவரம் (வரிசை எண். 8 ல் குறிப்பிட்டுள்ள தேர்வுகளில் தேர்ச்சி பெற்றவர்கள் சார்பில் மட்டும்)

| | | | |
|---|---|---|---|
| 1. | ஆசிரியர் பெயர் / உ.தொ.க.அ பெயர்<br><br>மற்றும் பணிபுரியும் பள்ளி / அலுவலகம்<br><br>முழு முகவரியுடன் | : | |
| 2. | **<u>in English</u>**<br>Name of Teacher / AEEO<br>Designation with Subject<br>Address with pincode | | |
| 3. | பிறந்த தேதி | | |
| | தற்போது கற்பித்து வரும் முக்கிய பாடம் (முதுகலை ஆசிரியர் எனில் பணி நியமன ஆணையின் நகல் கண்டிப்பாக இணைக்கவேண்டும் இல்லையெனில் முன்னுரிமை பட்டியலுக்கு பரிந்துரை செய்யக்கூடாது) | : | |
| | நகல் இணைக்கப்பட்டுள்ளதா ? | | |
| 4. | தற்போது பணிபுரியும் பதவி | | |
| அ) | பட்டதாரி ஆசிரியர் / உ.தொ.க.அலுவலர் பணியில் பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் (ஆணையின் நகல் இணைக்கப்படவேண்டும்.)<br><br>பட்டதாரி ஆசிரியர் தமிழ் எனில் பி.எட்., பட்டம் பெற்ற ஆண்டு நாளுடன் குறிப்பிட வேண்டும்.<br><br>தகுதிகாண் பருவம் முடித்த நாள்<br>ஆணையின் நகல் இணைக்கப்படவேண்டும் | | பணிவரன் முறை நாள்<br><br>பி.எட். பட்டம் பெற்ற நாள்<br><br>தகுதிகாண்பருவம் முடித்த நாள் |
| ஆ) | தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்வு செய்யப் பட்டிருப்பின், தேர்வு செய்யப்பட்ட ஆண்டும், தர எண் மற்றும் பணிவரன்முறை நாள் | : | ஆண்டு<br><br>தர எண்<br><br>பணிவரன் முறை நாள்<br><br>தகுதிகாண்பருவம் முடித்த நாள் |
| இ) | அரை மில்லியன் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 01.04.70–க்கு பிறகு "வேலை வாய்ப்பகம் மூலம் நேரடி நியமனம் பெற்றவர் எனில் நியமன அலுவலர் மற்றும் நியமன ஆணை எண். தேதி மற்றும் பணிவரன்முறை நாள். | : | ஆண்டு<br><br>தர எண்<br><br>பணிவரன் முறை நாள்<br><br>தகுதிகாண் பருவம் முடித்த நாள் |
| ஈ) | ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் பட்டதாரி | : | |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆசிரியராக 2000–2001 – ஆம் ஆண்டு வரை தெரிவு செய்யப்பட்டவர்கள் ஆண்டு ஆணை எண். மற்றும் தர எண் மற்றும் பணிவரன்முறை நாள் | | | ஆண்டு<br>தர எண்<br>பணிவரன் முறை நாள்<br>தகுதிகாண் பருவம் முடித்த நாள் |
| உ) | கருணை அடிப்படையின் மூலம் பள்ளி உதவி ஆசிரியர் / முதல் நிலைத் தமிழாசிரியர்/முதல் நிலை மொழியாசிரியர் பணியிடத்தில் பணிவரன் முறை செய்யப்பட்ட நாள் மற்றும் அரசாணை விவரம். | | | அரசாணை எண்<br>பணிவரன் முறை நாள்<br>தகுதிகாண் பருவம் முடித்த நாள் |
| ஊ) | ஈர்த்துக் கொள்ளப்பட்டவர் எனில் ஈர்த்துக் கொள்ளப்பட்ட பதவி மற்றும் தேதி. | | : | இணை இயக்குநரின் செயல்முறைகள்<br>இவ்வலகில் பணியில் சேர்ந்த நாள் |
| 5. | ஓராண்டிற்கு மேல் விடுப்பிலிருந்து வருகிறார் எனில் எந்தத் தேதியிலிருந்து விடுப்பில் உள்ளார் என்ற விவரம் | | : | |
| 6. | தாய் மொழி | | : | |
| (அ) | உயர்நிலை / பட்டப்படிப்பில் தமிழ் பயின்றுள்ளாரா? | | : | |
| (ஆ) | தமிழ் பயிலவில்லை எனில், தமிழ் இரண்டாம் மொழித் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளாரா? ஆம் எனில், தேர்ச்சி பெற்ற ஆண்டு / மாதம் குறிப்பிடவும் (தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம்) | | : | |
| 7. | கல்வித்தகுதிகள் | முக்கிய பாடம் | தேர்சிபெற்ற ஆண்டு/மாதம் | தேர்வின் பதிவு எண். |
| | பி.ஏ / பி.எஸ்.சி | | | |
| | எம்.ஏ / எம்.எஸ்சி. | | | |
| | பி.ட்டி / பி.எட் | | | |
| 8. | துறைத் தேர்வுகளில் தேர்ச்சி பெற்ற விவரங்கள் | | தேர்ச்சி பெற்ற ஆண்டு / மாதம் | தேர்வின் பதிவு எண். |
| அ | நிர்வாக அலுவலருக்கான கணக்குத் தேர்வு (அல்லது) சார்நிலை அலுவலர்களுக்கான கணக்குத் தேர்வு பாகம்–1 | | | |
| ஆ | மாவட்ட அலுவலக நடைமுறை நூல் தேர்வு | | | |
| இ | பள்ளித்துணை ஆய்வர் தேர்வு ( 3 தாள்கள்) தேர்ச்சி பெற்றிருப்பின் அதன் விவரம்<br>(இவை கூடுதல் தகவலுக்காக மட்டுமே) | | | |

| | | | |
|---|---|---|---|
| 9. | இதற்கு முன் அரசு உயர்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியராகப் பதவி உயர்வு அளிக்கப்பட்டு அதனை தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ உரிமைவிடல் செய்துள்ளாரா? ஆம் எனில், அதன் விவரம் (பதவி உயர்வு வழங்கப்பட்ட ஆணை எண். மற்றும் தேதி, பதவி உயர்வு உரிமைவிடல் ஏற்று வழங்கப்பட்ட ஆணை எண். மற்றும் தேதி ஆகியவற்றைக் குறிப்பிட வேண்டும்) (நிரந்தரமாக உரிமை விடல் செய்தவராயின் அன்னாருடைய பெயரை பட்டியலுக்குப் அனுப்பக் கூடாது) | : | |
| | ஆசிரியரின் கையொப்பம் | | |
| **தலைமை ஆசிரியர் மற்றும் மாவட்டக்கல்வி அலுவலர் அனுப்ப வேண்டிய விவரம்** | | | |
| 10. | கடந்த 5 ஆண்டுகளில் தண்டனை ஏதும் இவருக்கு அளிக்கப்பட்டிருப்பின் அது குறித்த விவரம் (துண்டனை ஏதும் பெறவில்லை எனில் 'இல்லை' எனக் குறிப்பிடப்பட வேண்டும் | ஆணை எண். மற்றும் தேதி | தண்டனை விவரம் |
| | | | |
| 11. | தமிழ்நாடு குடிமுறைப்பணி (ஒழுங்குமுறை மற்றும் மேல்முறையீடு) விதிகளில் விதி 17(பி)–ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை நிலுவையிலிருப்பின் அதன் விவரம் | : | |
| 12. | இவ்வாசிரியர் பணி மற்றும் நடத்தை குறித்து தலைமை ஆசிரியர் குறிப்புரை / பரிந்துரை | : | |

**சான்று**

கலம் 1 முதல் 11 வரையுள்ள விவரங்களைப் பணிப்பதிவேடு மற்றும் இதர ஆவணங்களின் அடிப்படையில் சரிபார்த்து, சரியாக உள்ளதெனச் சான்றளிக்கிறேன்.

தலைமை ஆசிரியரின் கையொப்பம்
(தேதியுடன்)

மாவட்டக் கல்வி அலுவலரின் கையொப்பம்
(தேதியுடன்)

மேற்குறிப்பிடப்பட்டுள்ள விவரங்கள் அனைத்தும் சரியாக உள்ளது என்றும், சான்றளித்து மேலொப்பம் செய்யப்படுகிறது.

தொடக்கக்கல்வி இயக்குநர் /
முதன்மைக்கல்வி அலுவலர்.

**/ மிக அவசரம் / தனிக் கவனம் /**

முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகம்
திருச்சிராப்பள்ளி
ந.க.எண் 12640/அ2/12 நாள் 25.12.12

(நகல்) அனுப்பலாகிறது.

தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகளில் குறிப்பிட்டுள்ள அறிவுரைகளைப் பின்பற்றி **01.01.2013** அன்றைய நிலவரப்படி அரசு உயர்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர் / நகராட்சி உயர்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர் பதவிக்கு பதவி உயர்வு மூலம் நியமனம் செய்யத் தகுதி வாய்ந்தோர் பட்டியலை கல்வி மாவட்ட அளவில் சம்மந்தப்பட்ட பள்ளித் தலைமை ஆசிரியர்களிடமிருந்து உரிய படிவத்தில் **04.01.2013**க்குள் பெற்று தொகுத்து இணைப்பில் கண்டுள்ள மாதிரிப் படிவத்தில் பூர்த்தி செய்து குறுந்தகடு (CD) மற்றும் பிரிண்ட் அவுட்டினை **07.01.2013** அன்றே இருநகல்களில் சமர்ப்பிக்குமாறு மாவட்டக் கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். தகுதி வாய்ந்த எந்த ஒரு ஆசிரியரின் பெயரும் விடுபடவில்லையெனச் சான்றளிக்குமாறும் விடுபட்ட ஆசிரியர்கள் எவரிடமிருந்தாவது குறிப்பிட்ட தேதிக்கு பின்னர் விண்ணப்பம் பெறப்பட்டால் அதற்கு சம்பந்தப்பட்ட மாவட்டக் கல்வி அலுவலர்களே முழுப் பொறுப்பேற்க நேரிடும் எனவும் இயக்குநரவர்களுக்கு தொகுப்பறிக்கை சமர்ப்பிக்கப் படவேண்டுமென்பதால் காலதாமதத்தை தவிர்க்குமாறும் மாவட்டக் கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

முதன்மைக் கல்வி அலுவலர்
திருச்சிராப்பள்ளி

பெறுநர்
அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்

நகல் கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர்
அனைவருக்கும் கல்வி இயக்கம் திருச்சி
**(தகுதி வாய்ந்த ஆசிரியர் பயிற்றுநரின் விவரங்களை குறிப்பிட்ட தேதிக்குள் அனுப்ப அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது)**

நகல் அரசு உயர்நிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர்கள்
**(04.01.13 தேதிக்குள் தகுதி வாய்ந்தோர் பட்டியலை மாவட்டக் கல்விஅலுவலர்களுக்கு சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது)**